## ✠ ஒரு தாயின் கருவறையில் ஒரு குழந்தையானது எவ்வாறு உருவாகிறது என்பதனைப் பற்றிய பாடல்

**கருத்தரிக்க முன்னெலாம் காயல் நின்றது தேயுவில்**

**உருத்தரிக்கு முன்னெலாம் உயிர்ப்பு நின்றது அப்புவில்**

**அருள் தரிக்கு முன்னெலாம் ஆசை நின்றது வாயுவில்**

**திருக்கறுத்துக் கொண்டதே சிவாயம் என்று கூறுவீர்**

**இதன் விளக்கம்**

ஆகாயத்திலிருந்து ஆன்மா கருத்தரிக்கும் முன்பு காயமான உடம்பு, தாய், தகப்பனின் உஷ்ணத்தில் தீ-யாக நின்றிருந்தது. உருவாவதற்கு முன்பு உயிர் சுக்கில சுரோனித நீராகி நின்றது. இறை அருளால் உயிர் உடம்பாகி வெளிவருவதற்கு முன்பு மனமானது. ஆசையாக காற்றில் நின்றது. பின் தாயின் கருவறை என்ற மண்ணில் சிசுவாக வளர்ந்து உடலுயிராய் பிறவி வந்தது என்பதை திருத்தமாக தெரிந்துகொள்வோம். சிவாயநம என்ற பஞ்சாட்சாத்தை உணர்ந்து மனதை ஒருநிலைப் படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள்.

✠ <u>பிறப்பதற்கு முன் நாம் எங்கு இருந்தோம்</u>

**பிறப்பதற்கு முன்னெல்லாம் இருக்குமாறு தெங்னே!**

**பிறந்த மண்ணிறுந்து போய் இருக்குமாற தெங்கனே!**

**குறித்து நீர் சொல்லாவிடில் குறிப்பில்லாத மாந்தரே!**

**அறுப்பனே செவி இரண்டும் அஞ்செழுத்து வாளினால்!**

**<u>இதன் விளக்கம்:</u>**

**பிறப்பதற்கு முன்பு நாம் எங்கிருந்தோம்? பிறந்து வளர்ந்து இறந்தபின் வந்தபின் எங்கே போய் இருப்போம்? என்பதை எண்ணிப்பாருங்கள். இப்பிறப்பின் மேன்மையை உணராமல் எந்த இலட்சியமும் இல்லாமல் மறைந்து போகும் மானிடர்களே! உங்கள் பிறவியை அறுக்கவும் மீண்டும் பிறவாமல் இருக்கவும் அஞ்செழுத்து என்றும் பஞ்சாட்சர மந்திரத்தை உங்கள் காதுகளில் ஓதுகிறேன் கேளுங்கள் என்று கூறுகிறார்கள்.**

நாம் அனைவரும் இவ்வுலகில் ஒரு தாயின் கருவறையில் உருவாகிறோம். இதன் அடிப்படையில்தான் இந்த மண்ணிற்கு மனித உடல் மூலமாக உயிர் சேர்ந்து (மனித உடல் + உயிர்) என்ற அ டிப்படையில் இந்த மண்ணிற்கு வருகிறோம். நாம் அனைவரும் ஒரு தாயின் கருவறையில் இருந்து வெளியில் வரும்பொழுது நாம் அனைவரும் எப்படி வருகிறோம். அதுவே நமது வாழ்க்கையின் அர்த்தமாகும். நாம் அனைவரும் இந்த மண்ணில் வரும்பொழுது பொருள், புகழ், பணம் போன்ற எந்த ஒரு பொருளையும் இவ்வுலகிற்கு நாம் கொண்டு வருவதில்லை. நாம் அனைவரும் பிறக்கும் போது, அந்த தருணம் நாம், திறந்த மேனியில் தான் பிறக்கிறோம் என்பதை நாம் உணர வேண்டும். நம்மிடம் எதுவும் இல்லை என்றும், எதுவும் கொண்டு வருவதில்லை என்பதே இதன் அர்த்தமாகும்

**இயற்கையோடு இணைந்திடுவோம் !**

**ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கிடுவோம்!!**

**SIDDHAS HEALTHY LIFE ADVISORY CENTRE**